### சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

# செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

## (25.10.2026)



1. கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் அடுத்த இறைச்சகுளத்தில் நிதி நிறுவன அதிபரை கயிற்றால் கழுத்தை இறுக்கி கொலை செய்த த.வெ.க. பெண் நிர்வாகி சிக்கினார்.

2. தூத்துக்குடி மாவட்டம் ஏரல் அருகே கணேசபுரம் பகுதியில் அறிவாளுடன் ரகளை செய்த ரவுடியை அடித்தே கொலை செய்த பொதுமக்கள்.



3. குமரி மாவட்டம் கொட்டாரம் அருகே அச்சன்குளத்தில் முன்விரோதம் காரணமாக பேரூராட்சி தற்காலிக ஊழியர் கத்தியால் குத்திக் கொலை.

4. திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அருகே கட்டைமேடு பகுதியில் குடிபோதையில் முதியவர் அடித்துக் கொலை.

5. திருப்பூர் மாவட்டம் சாமுண்டிபுரம் அருகே ஓரினச்சேர்க்கை தகராறு காரணமாக தனியார் நிறுவன ஊழியர் தலையில் அம்மிக்கல்லை போட்டு படுகொலை.

6. கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அருகே பாகலூரில் இளம் பெண்ணை அறிவாளால் சராமரியாக வெட்டிக் கொலை செய்த காதலன் லாரி முன் பாய்ந்து தற்கொலை.



7. திருநெல்வேலி மாவட்டம் பணகுடி அருகே ஆறு வயது சிறுமிக்குப் பாலியல் தொல்லை கொடுத்த ரியல் எஸ்டேட் அதிபர் சிக்கினான்.

8. நீலகிரி மாவட்டம் பந்தலூர் அருகே வீட்டில் தனியாக இருந்த பிளஸ் டூ மாணவிக்குப் பாலியல் தொல்லை கொடுத்த கூலித் தொழிலாளி சிக்கினான்.




9. நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் அருகே தனியார் பள்ளி ஆசிரியர் வீட்டு பூட்டை உடைத்து 45 சவரன் நகை கொள்ளை.

10. சென்னை அருகே மதுரவாயலில் கட்டுமானப் பணிக்கு வைத்திருந்த ஒரு லட்சம் மதிப்புள்ள இரும்பு கம்பிகள் திருட்டு.

11. கடலூர் மாவட்டம் பெண்ணாடம் அருகே இறையூர் கிராமத்தில் பெரிய நாயகி அம்மன் கோவில் பூட்டை உடைத்து நகை மற்றும் உண்டியல் பணங்கள் கொள்ளை.

12. சென்னை விருகம்பாக்கத்தில் 7 கிராம் மெத்தபெட்டமைன் பறிமுதல் செய்யப்பட்டது. துணை நடிகர் மகன் உள்ளிட்ட 3 பேர் கைது செய்யப்பட்டனர். துணை நடிகரின் மகன். பேராசிரியரின் மகன் உட்பட மூவர் சிக்கினர்.

13. மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே காரில் கடத்தப்பட்ட துப்பாக்கி மற்றும் உலோக சிலைகள் சிக்கின.




14. தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் கள்ளபிரான் கோயில் அருகே காவலாளிக்கு அரிவாள் வெட்டு. காவலாளி துர்க்கைசாமி என்பவரை அரிவாளால் வெட்டி விட்டு தப்பியோடிய மர்ம நபர். உயிருக்கு ஆபத்தான நிலையில் காவலாளி துர்க்கைசாமி மருத்துவமனையில் அனுமதி. த.வெ.க ஆட்சியில் சட்டம் ஒழுங்கு முற்றிலும் சீர்குலைந்து இருப்பதால் பொதுமக்கள் அச்சம்.

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## வண்ணை கே.எஸ்.பாண்டியன்

## அக்டோபர் 28 (1952)



கழகத்தில் நீங்காப் பற்றுக் கொண்டு உழைத்தவரும் – சிறந்த பொதுநலத் தொண்டராகிய இவர், கழகம் துவங்கிய காலத்தில், வடசென்னை பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

1937ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு இயக்கத்தின் தளரா உழைப்பாளராக இருந்ததுடன், அப்போராட்டத்தில் சிறை சென்ற செயல்வீரர்.

தி.மு.கழகம் தொடக்க நாள் கூட்டத்தை சிறப்புற நடத்த காரணமானவர்களில் இவரும் ஒருவர்.

"கொள்கைக்காக வாழ்ந்து, கொள்கைக்காக உயிரை இழந்த அந்த அருமை வீரர் ஆற்றிய தொண்டுப்பாதையில் அவர் சிந்திய இரத்தத்தை நினைவில் கொண்டு, நான் சென்று கொண்டிருப்போம்!" என, இவர் எதிர்க்கட்சியினரால் படுகொலை செய்யப்பட்ட மறுநாள் 9–11–1952 நாளிட்ட "திராவிட நாடு" தலையங்கம் வெளியிட்டு சிறப்பித்தது.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### எஸ்.ஐ.ஆர். பணியின் போது பயன்படுத்தப்பட்ட

# 'சாப்ட்வேர்' பற்றி பதில் தர தேர்தல் ஆணையம் மறுப்பு!

## முறைகேடுகள் அம்பலமாகி விடுமென்பதால் அச்சம்!

**புதுடெல்லி, அக். 28-**

**வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த (எஸ்ஐஆர்) பணியின் போது, வாக்காளர் பட்டியலில் உள்ள பிழைகளை கண்டறிய பயன்படுத்தப்பட்ட சாப்ட்வேர் உள்ளிட்ட ஆர்டிஐ கேள்விகளுக்கு தேர்தல் ஆணையம் பதில் தர மறுத்து விட்டது. வணிக ரீதியான ரகசியத்தை வெளியிட முடியாது என கூறி உள்ளது. இந்த தகவலை வெளியிட்டால், குட்டு வெளியாகி விடுமென்பதாலேயே தகவலை தர தேர்தல் ஆணையம் மறுப்பதாக எதிர்க்கட்சிகள் விமர்சித்துள்ளன.**

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த (எஸ்ஐஆர்) பணியில் பல முறைகேடுகள் நடந்திருப்பதாகவும், இந்த விவகாரத்தில் பாஜ அரசுக்கு ஆதரவாக தன்னிச்சையாக செயல்பட்ட தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வேண்டுமெனவும் நாடு முழுவதும் பல்வேறு அமைப்பினரும் எதிர்க்கட்சிகளும் போராட்டங்களை நடத்தி வருகின்றன.

மேலும், வாக்காளர் பட்டியலை நிர்வகிக்க பயன்படுத்தும் இசிஐநெட் இணையதளத்திலும் பல முறைகேடுகள் நடந்திருப்பதாக குற்றம் சாட்டப்படுகிறது. இதுதொடர்பாக, 2 தேர்தல் ஆணையர்கள் அளித்த புகாருக்கு எதிராக தலைமை தேர்தல் ஆணையர் மீது ஒன்றிய அமைச்சரவை செயலகம் நடவடிக்கை எடுக்க மறுத்து விட்டதாக சமீபத்தில் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் (ஆர்டிஐ) கீழ் கேட்கப்பட்ட கேள்விக்கு தரப்பட்ட பதில் பரபரப்பை ஏற்படுத்தியது.

**ஆர்.டி.ஐ.யின் கீழ் கேள்வி!**

இந்நிலையில், எஸ்ஐஆர் பணியின் போது வாக்காளர் பட்டியலில் உள்ள பிழைகள், போலி பதிவுகள் மற்றும் இரட்டை பதிவுகளை கண்டறிவதற்கு பயன்படுத்தப்பட்ட சாப்ட்வேர் குறித்த விரிவான தொழில்நுட்ப தகவல்களை வெளியிட தலைமை தேர்தல் ஆணையம் மறுத்திருப்பது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. வாக்காளர் பட்டியலில் உள்ள முரண்பாடுகளை கண்டறிய தேர்தல் ஆணையம் என்ன மாதிரியான சாப்ட்வேரை பயன்படுத்தியது, செயற்கை நுண்ணறிவு அல்லது மெஷின் லேர்னிங் போன்ற நவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டதா என்பது குறித்து ஆர்டிஐயின் கீழ் கேள்வி கேட்கப்பட்டது.

**தேர்தல் ஆணையத்தில் வெளிப்படைத் தன்மை இல்லை!**

இதற்கு பதிலளித்த தேர்தல் ஆணையம், சாப்ட்வேர் தொடர்பான தொழில்நுட்ப விவரங்கள் வணிக ரீதியான ரகசியங்கள் என்றும் அறிவுசார் சொத்துரிமை தொடர்பானவை என்றும் கூறி, ஆர்டிஐயின் கீழ் இவற்றை வெளியிட முடியாது என தெரிவித்துள்ளது. மேலும் ஏஐ பயன்பாடு தொடர்பான கேள்விக்கு நேரடியாக பதிலளிக்காமல், பயன்படுத்தப்பட்ட சாப்ட்வேர் சரிபார்ப்புக்கான ஒரு கருவியாக மட்டுமே செயல்படுகிறது என்றும், வாக்காளர் பட்டியலில் பெயர்களை நீக்குவது அல்லது சேர்ப்பது போன்ற அதிகாரப்பூர்வ முடிவுகளை அந்தந்த தொகுதி தேர்தல் பதிவு அலுவலர்களே கள ஆய்வுகளின் அடிப்படையில் மேற்கொள்வதாக தேர்தல் ஆணையம் பதிலளித்துள்ளது. இது தேர்தல் ஆணையத்தின் செயல்பாட்டில் வெளிப்படைத்தன்மையின்மையை காட்டுவதாக எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டி உள்ளன.

**மிகப் பெரிய முறைகேடுகள் அம்பலமாகிவிடும்!**

இதுதொடர்பான ஊடக செய்தியை காங்கிரஸ் பொதுச் செயாலளர் ஜெய்ராம் ரமேஷ் தனது எக்ஸ் தளத்தில் நேற்று பகிர்ந்து பதிவிட்டுள்ளதாவது:-

எஸ்ஐஆர் சர்ச்சையின் மையப் புள்ளியாக இருக்கும் இசிஐநெட் சாப்ட்வேர் குறித்த தகவல்களை தேர்தல் ஆணையம் தொடர்ந்து மறைத்து வருகிறது. ஆர்டிஐயில் கேட்கப்பட்ட கேள்விக்கும் பதில் தரப்படவில்லை. பலவீனமான காரணங்களைக் கூறி, சாப்ட்வேரின் பெயரை சொல்லவோ, அல்லது செயற்கை நுண்ணறிவு (ஏஐ) பயன்படுத்தப்படுகிறதா என்பதையும், அதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ன என்பதையும் உறுதிப்படுத்தவோ தேர்தல் ஆணையம் மறுத்துவிட்டது.

இசிஐநெட் சாப்ட்வேர் மற்றும் ஏஐ பயன்பாடு குறித்த வெளிப்படைத் தன்மை இல்லாமை, மக்கள் மத்தியில் ஒட்டுமொத்த தேர்தல் செயல்முறையின் நம்பகத்தன்மையையே சிதைத்துள்ளது. இந்த தகவல்களை வழங்கினால், மிகப்பெரிய அளவில் முறைகேடுகள் நடந்துள்ளது அம்பலமாகிவிடும் என்பதால் தான், தேர்தல் ஆணையம் தொடர்ந்து தகவல்களை தர மறுக்கிறது.

இவ்வாறு அவர் குற்றம்சாட்டி உள்ளார்.

### ஆளும் த.வெ.க. அரசு – அரசு ஊழியர்களின் போராட்டங்களை ஒடுக்க சுற்றறிக்கை!

# அரசுக்கு எதிராக கொடிபிடிப்பதே தவறு என்கிற போக்கில் நடந்து கொள்வது சரியல்ல!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் குற்றச்சாட்டு!

*சென்னை, அக். 28-*

*தினகரன் நாளேடு 26.10.2026 தேதியில் அரசு அடக்குமுறை என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள தலையங்கம் வருமாறு:-*



தினகரன்

அக்டோபர் 26, 2026 திங்கட்கிழமை

அரசு அடக்குமுறை

தி.மு.க. அரசு அமைந்த நாள் முதல், அரசு ஊழியர்கள் மீது பல்வேறு சுமைகளை சுமத்தி வருகிறது. குறிப்பாக பழைய ஓய்வூதிய திட்டம், ஒப்பந்த முறைகளை கைவிடுதல் உள்ளிட்ட கோரிக்கைகளுக்கு விடை கிடைக்கும் என எதிர்பார்த்த அரசு ஊழியர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சுகிறது. அரசு ஊழியர்கள் சொத்து விபரங்களை ஆன்லைனில் சமர்ப்பிக்க வேண்டும் என இந்த அரசு கிடுக்கிப்பிடி போட்டு வருகிறது. மேலும் அரசு ஊழியர்கள் தங்கள் துறை ரீதியிலான குறைகளுக்கு, துறை தலைவரின் முன் அனுமதியின்றி, மக்கள் பிரதிநிதிகள், முதல்வரின் தனிப்பிரிவுக்கு மனு அனுப்பினால் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எனவும் மிரட்டி வருகிறது.

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் நடத்தை விதிகள் 1973ன் விதி 12ஐ சுட்டிக் காட்டி, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் சோம சுந்தரம் அனைத்து அலுவலர்களுக்கும் அதிரடி சுற்றறிக்கை ஒன்றை சமீபத்தில் அனுப்பினார். `அரசு ஊழியர்கள் ஒன்றிய அல்லது மாநில அரசின் கொள்கைகள், திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளை பொதுவெளியிலோ, ஊடகங்களிலோ அல்லது பொதுக்கூட்டங்களிலோ பாதகமாக விமர்சிக்கக் கூடாது.

மேலும், பிற அரசுகளுடனான நல்லுறவைப் பாதிக்கும் வகையிலான எந்தவொரு கருத்தையும் எக்காரணம் கொண்டும் வெளியிடக் கூடாது. அரசை விமர்சித்து நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் இடம்பெறும் அலுவல் சாராத கூட்டங்களில் அரசு ஊழியர்கள் எக்காரணம் கொண்டும் பங்கேற்கக் கூடாது. விதிகளுக்கு மாறாகச் செயல்படும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மீது அரசு ஊழியர் நடத்தை விதிகளின் கீழ் கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்' என அந்த உத்தரவில் எச்சரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது. பொதுசுகாதாரத் துறை வெளியிட்டுள்ள இந்த எச்சரிக்கை உத்தரவு, தற்போது அரசு ஊழியர்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த உத்தரவுக்கு கம்யூனிஸ்ட் கட்சிகள் மற்றும் அரசு ஊழியர் சங்கங்கள் தீவிர எதிர்ப்பு தெரிவித்துள்ளன. அரசை விமர்சிப்பதற்கும், அமைதியான முறையில் தங்களின் வாழ்வாதாரக் கோரிக்கைகளுக்கு போராடுவதற்கு அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள ஜனநாயக உரிமைகளை இந்த சுற்றறிக்கை பறிப்பதாக அரசு ஊழியர்கள் குற்றம் சாட்டி வருகின்றனர். அரசின் தவறான கொள்கைகளைத் தட்டிக் கேட்கும் உரிமை தங்களுக்கு உண்டு என்றும் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் உள்ளிட்ட பல்வேறு அரசு ஊழியர் சங்கங்கள் போர்க்கொடி தூக்கியுள்ளன.

தமிழ்நாடு அரசு ஊழியர்கள் மட்டுமின்றி, சி.பி.எஸ். ஒழிப்பு இயக்கம், பகுதி நேர ஆசிரியர்கள் கூட்டமைப்பினரும் தங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி அடிக்கடி போராட்டங்களில் ஈடுபடுகின்றனர். சத்துணவு, அங்கன்வாடி பணியாளர்கள், ஒப்பந்த முறை செவிலியர்கள் ஆகியோர் தங்களுக்கு என்றாவது விடியல் வரும் என்கிற நம்பிக்கையிலே தொடர்ந்து போராடி வருகின்றனர். இந்நிலையில் அவர்களது பிரச்சினைகளை களைய மனமின்றி, ஆளும் த.வெ.க. அரசு போராட்டங்களை ஒடுக்கவும், அரசுக்கு எதிராக கொடிபிடிப்பதே தவறு என்கிற போக்கில் நடந்து கொள்வதும் சரியல்ல.

அரசு ஊழியர்களை பொறுத்தவரை இதற்கு முன்பு ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் எஸ்மா, டெஸ்மா சட்டங்களையே எதிர்த்த நெஞ்சுரம் மிக்கவர்கள். மோடியா, லேடியா என தேர்தல் களத்தில் கேள்வி எழுப்பிய ஒரு பெண்மணிக்கே சவால் விடுத்த அரசு ஊழியர்கள், இப்போதைய சுற்றறிக்கைபூச்சாண்டிகளுக்கு எல்லாம் பயப்படுவர் என்பது அறியாமையின் வெளிப்பாடாகும்.

இவ்வாறு 'தினகரன்' நாளேடு தனது தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

### நிர்வாகத் திறமையற்ற த.வெ.க. அரசின் சட்டம் ஒழுங்கு சீர்கேட்டை கண்டித்து மகளிர் அணி சார்பில் மயிலாடுதுறையில் ஆர்ப்பாட்டம்!

# மகளிர், மகளிர் தொண்டர் அணியினர் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும் !

## மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., வேண்டுகோள்!

*மயிலாடுதுறை அக்.28-*

*கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்புக்கு இணங்க மயிலாடுதுறையில் மகளிர் அணி சார்பில் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர் கேட்டை கண்டித்து நாகையில் வரும் 31ஆம் தேதி சனிக்கிழமை மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம். இதுகுறித்து மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம் முருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.*

*தமிழகத்தில் பெண்களின் பாதுகாப்பு சட்டம் ஒழுங்கு சீர்கேடு போதைப் பொருள் புழக்கம் கொலை கொள்ளை கண்டித்து தி.மு.க. தலைமைக் கழக அறிவிப்பின்படி வரும் அக்டோபர் 31-ஆம் தேதி தமிழ்நாடு முழுவதும் தி.மு.க. மகளிர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.*

*அதன்படி மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பில் அக்டோபர் 31-ஆம் தேதி சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் மயிலாடுதுறையில் கிட்டப்பா அங்காடி போஸ்ட் ஆபீஸ் எதிரில் மயிலாடுதுறை மகளிர் அணியின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது*

*த.வெ.க. அரசு ஆட்சிப் பொறுப்பேற்று ஆறு மாதங்கள் கூட முழுமையாக நிறைவடையாத நிலையில் தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு பெண்களின் பாதுகாப்பு மற்றும் மக்கள் நலன் சார்ந்த பிரச்சினைகள் குறித்து பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளன.*

*பெண்களும் சிறுமிகளும் அச்சமின்றி வாழ்வதற்கான பாதுகாப்பான சூழலை உருவாக்குவது எந்தவொரு அரசின் அடிப்படைக் கடமையாகும். ஆனால் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான குற்றங்கள் கொலைகள் தாக்குதல்கள் உள்ளிட்ட சம்பவங்கள் குறித்த செய்திகள் பொது மக்களிடையே கவலையை ஏற்படுத்துகின்றன. இத்தகைய குற்றங்களைத் தடுக்கவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவும் குற்றவாளிகள் மீது சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்க அரசு தவறிவிட்டது.*

*கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சுட்டிக் காட்டியதுபோல் பெண்களின் பாதுகாப்புக்காக உருவாக்கப்பட்டதாகக் கூறப்படும் 'சிங்கப்பெண்'*



*சிறப்புப் படையின் செயல்பாடுகள் குறித்தும் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்தும் கேள்விகள் எழுப்பப்படுகின்றன. குற்றங்களைத் தடுப்பதில் காவல்துறையின் செயல்பாடுகள் வலுப்படுத்தப்பட வேண்டிய நிலையில் அரசின் செயல்பாடுகளை விமர்சிக்கும் தி.மு.க. தோழர்கள் மற்றும் ஜனநாயக சக்திகள் மீது கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுதான். இந்த நிர்வாக திறமையற்ற சோபா மாடல் அரசின் வேலையாக உள்ளது*

*பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதிலும் குற்றங்களைத் தடுப்பதிலும் சட்டம்-ஒழுங்கைப் பேணுவதிலும் அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்பதே கழகத்தின் வலியுறுத்தலாகும்.*

*தமிழ்நாட்டில் த.வெ.க. பொறுப்பேற்று முதல் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு தொடர்பாகப் பொதுமக்களிடையே கவலைகள் எழுந்துள்ளன. அரிசி பருப்பு வகைகள் சமையல் எண்ணெய் உள்ளிட்ட பொருட்களின் விலை உயர்வு நியாயவிலைக் கடைகளில் பொருட்கள் தட்டுப்பாடு காய்கறிகள் மற்றும் அன்றாடத் தேவைக்கான பொருட்களின் விலை யேற்றம் ஆகியவை ஏழை எளிய மற்றும் நடுத்தரக் குடும்பங்களின் பொருளாதாரச் சுமையை அதிகரிக்கின்றன. பால் விலை உயர்வு அரிசி பருப்பு எண்ணெய் பால் விலைகள் நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது. மின் கட்டண உயர்வு அறிவிக்கப்படாத மின் வெட்டு மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்துகின்றன. வீடுகள் சிறு-குறு தொழில் நிறுவனங்கள் வணிகர்கள் மற்றும் விவசாயிகள் எனப் பல்வேறு தரப்பினரும் ஒருபுறம் மின்கட்டணச் சுமையும் மறுபுறம் மின்வெட்டாலும் பாதிப்புக்கு உள்ளாகி உள்ளது.*

*பெண்களின் பாதுகாப்பு சட்டம்-ஒழுங்கு போதைப் பொருள் ஒழிப்பு விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் சீரான மின்சார விநியோகம் ஆகியவை ஒவ்வொரு குடும்பத்தின் அன்றாட வாழ்க்கையையும் நேரடியாகப் பாதிக்கிறது. நிர்வாக திறமையற்ற த.வெ.க. அரசின் சட்ட ஒழுங்கு சீர் கேட்டை கண்டித்து மயிலாடுதுறையில் மகளிர் அணி சார்பில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் தலைமைச்செயற்குழு உறுப்பினர்கள். பொதுக்குழு உறுப்பினர்கள் ஒன்றிய நகர, பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள், மகளிர் தொண்டரணியினர், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகள் நகர்மன்ற பேரூராட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் அக்டோபர் 31-ஆம் தேதி சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் நாகையில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளாகக் கலந்துகொண்டு ஆர்ப்பாட்டத்தை வெற்றியடைய செய்ய கேட்டுக் கொள்கிறேன்*

*இவ்வாறு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*